பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 12 2025 MONDAY 6 30 PM

## வணக்கம்-மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கினை எட்டுவதில், குடிமைப்பணி அதிகாரிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. மின்னணு பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதற்கு உற்பத்திக்கான இந்தியா இயக்கம் உதவியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் ஐந்து செவிலியர் கல்லூரிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. வாக்கு வங்கி அரசியலை கருத்தில் கொண்டு திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக Pole மற்றும் Aerial சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vir Gahrotra தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கினை எட்டுவதில், குடிமைப்பணி அதிகாரிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பாதுகாப்பு கணக்கு சேவை பயிற்சி அதிகாரிகளிடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

பணியில் வெளிப்படைத்தன்மையையும், நேர்மையையும் கடைபிடிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

அரசு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு முறையாக செலவிடப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பாதுகாப்பு கணக்கு சேவை அதிகாரிகளுக்கு உள்ளதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

மின்னணு பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதற்கு உற்பத்திக்கான இந்தியா இயக்கம் உதவியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தி ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

நடப்பு நிதியாண்டில், கடந்த மாதம் வரை மின்னணு பொருட்களின் ஏற்றுமதி 38 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

நியூஸிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுக்கள் குறுகிய காலத்தில் இறுதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்த இது உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

உயர் கல்வியை சர்வதேச தரத்திற்கு இணையாக மாற்றுவதற்கு வகை செய்யும் அறிக்கையை நித்தி ஆயோக் வெளியிட்டுள்ளது.

இதில், 22 கொள்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய - மாநில அரசுகளுக்கான 76 செயல் திட்டங்களும் இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<<

தமிழக அரசு செயல்படுத்தி வரும் முக்கிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் ஆறு துறைகளுக்கு உட்பட்ட 27 திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்ட முதலமைச்சர், அவற்றை அடுத்த மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் ஐந்து செவிலியர் கல்லூரிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒப்பந்த செவிலியர்களின் கோரிக்கைகள் குறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மா. சு 56 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

உலக கோப்பை கேரம் போட்டியில், 3 பிரிவுகளில் தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ள சென்னையைச் சேர்ந்த கீர்த்தனாவிற்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பான புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளார்.

3 தங்கப்பதக்கங்களை வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்த கீர்த்தனாவை சந்தித்து வாழ்த்து கூறியது, மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் டாக்டர் எல். முருகன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

வாக்கு வங்கி அரசியலை கருத்தில் கொண்டு திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், திமுக அரசின் பிரிவினைவாத அரசியலுக்கு அரசு அதிகாரிகளும் உடந்தையா, என்று வினவியுள்ளார்.

இந்துக்கள், திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்றுவதில் இஸ்லாமியர்களுக்கும், இஸ்லாமியர்களின் விழாக்களை கொண்டாடுவதில் இந்துக்களுக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் இப்பிரச்சினையில் திமுக அரசு தலையிட்டு, குழப்பத்தை ஏற்படுத்துவது ஏன் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

>>>>><<<<<

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், உள்துறைச் செயலர் மற்றும் காவல்துறை தலைவர், அடுத்த மாதம் 12ஆம் தேதி நேரில் ஆஜராகுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரித்த நீதிபதி ஆஷா இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இப்பிரச்சினையில் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தினாலோ, மேல்முறையீடு செய்து தடைஉத்தரவு பெற்றாலோ இருவரும் நேரில் ஆஜராக வேண்டிய அவசியமில்லை என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம், விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாக, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – விவசாயிகள் 36 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மக்களிடையே நற்சிந்தனைகளை வளர்க்கும் வகையில், மார்கழி பெருவிழா சிறப்பு சொற்பொழிவு, சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டையில் நடைபெற்று வருகிறது.

நாற்பதாண்டுகளாக நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியில், பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 43 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து ஆட்சியர் திருமதி. அழகு மீனா இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

கோவையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மத்திய அரசின் இணைச்செயலர் திரு. குல்தீப் நாராயணன் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

அரியலூர் மாவட்டத்தில் தமிழ் ஆட்சி மொழி குறித்து மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய விசாரணை மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவள்ளி அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம், அவர்களுக்கு கற்பிப்போம் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆட்சியர் திரு. பிரதாப் தலைமையில் இன்று நடைபெற்றன.

>>>>><<<<<

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

தெற்கு ரயில்வேயின் மண்டல ரயில் பயணிகளின் ஆலோசனைக் குழுக் கூட்டம், அதன் பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக Pole மற்றும் Aerial சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vir Gahrotra தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

ஹங்கேரியின் Budapest-ல் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஜூனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் தங்கப்பதக்கம் வெல்லும் முதலாவது இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

>>>>><<<<<

ஹாக்கி இந்தியா லீக் போட்டிக்கான புதிய அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி மகளிர் பிரிவு ஆட்டங்கள், ராஞ்சியில் வரும் 28ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 10ஆம் தேதி நிறைவடைகிறது.

ஆடவர் பிரிவு போட்டிகள் சென்னை, ராஞ்சி மற்றும் புவனேஷ்வரில் அடுத்த மாதம் 3ஆம் தேதி தொடங்கி 26ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

>>>>><<<<<